முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.410/2017

தேதி : 17-04-2026

(பி.வா.சா.1) – திருமதி.ஜெயந்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வழக்கின் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். 4ம் பிரதிவாதி என் கணவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் கணவரின் இளைய சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஜோசப் என்பவரிடமிருந்து 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார். 3ம் பிரதிவாதி என் கணவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவண்தைத தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பவர் பத்திரத்தின் படி 30.09.2013ல் ஒரு கிரைய ஒப்பந்தம் 4ம் பிரதிவாதி என்னுடைய பெயருக்கும், 1ம் பிரதிவாதி பெயருக்கும் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 தான் அந்த கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். நானும் என் கணவரும் எங்கு வசிக்கிறோம் என்றால் நான் அட்டுவம்பட்டியில் வசிக்கிறேன், ஆனால் நானும் என் கணவரும் 2013க்கு பின்னர் பிரிந்து வாழ்கிறோம், ஆனால் அவரும் அட்டுவம்பட்டியில் தான் வசிக்கிறார். கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் நாங்கள் ஒன்றாக தான் இருந்தோம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

2. முத்திரை தாள் எங்கு வைத்து வாங்கப்பட்டதா என்றால் கொடைக்கானலில் வாங்கப்பட்டது. எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் 30.09.2013. கிரைய ஒப்பந்தம் யாரை வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் 4ம் பிரதிவாதியை வைத்து தான். கிரைய ஒப்பந்தம் கையால் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் தட்டச்சு செய்யப்பட்டது. வீட்டில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் இல்லை, கடையில் வைத்து. கடை பெயர் என்ன என்றால்

தெரியாது. அதில் பத்திர எழுத்தரின் கையெழுத்து இல்லை என்றால் ஆமாம், எங்களுக்குள்ளே நாங்கள் எழுதிக்கொண்டோம். கிரைய ஒப்பந்தத்தில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 1354. கிரைய ஒப்பந்தம் தயார் செய்யும்போது அந்த சொத்து எத்தனை உட்பிரிவாக இருந்தது என்றால் தெரியாது. 3 உட்பிரிவாக இருந்தது என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் போட்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்திற்கு பின்னர் 3ம் பிரதிவாதி 3ம் நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால் அட்டுவம்பட்டி கன்னிகாடு. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் தான் எங்களுக்கும் சொத்து உள்ளது என்றும் அதில் தான் நான் வசிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தான் 3ம் பிரதிவாதி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

3. கிரைய ஒப்பந்தத்தில் சொத்தின் மதிப்பு எவ்வளவு போடப்பட்டியிருந்தது என்றால் (என்னுடைய சொத்தின்) 2 ஏக்கர் 19 செண்ட்டிற்கு 2,19,000/-, (1ம் பிரதிவாதியின் சொத்து )90 செண்ட்டின் மதிப்பு 90,000/-. கிரைய ஒப்பந்ததில் என் கணவருக்கு எவ்வளவு முன் பணம் கொடுத்தோம் என்றால் நான் 2,10,000/-மும், 1ம் பிரதிவாதி 85000 முன்பணமாக கொடுத்தார். மீதத்தொகை எவ்வளவு என்றால் நான் 9 ஆயிரமும், 1ம் பிரதிவாதி 5 ஆயிரமும் கொடுக்க வேண்டியதாக இருந்தது. மீதத்தொகை கொடுக்க கால அவகாசம் என்ன என்றால் 2 ஆண்டு. மீத தொகை எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 4ம் பிரதிவாதி கிரையத்தை பதிந்து கொடுக்க மறுத்துவிட்டதால் இந்த நீதிமன்றத்தில் OS 152/16 வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றோம், அந்த தீர்ப்பின்படி நீதிமன்றத்தில் அத்தொகையை வைப்பு செய்தோம். கிரைய ஒப்பந்தத்தின்படி 4ம் பிரதிவாதிக்கு எப்போது அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 16.03.2016. யார் யாருக்கு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் 3, 4ம் பிரதிவாதிக்கு. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியலல. நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எந்த முகவரியில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அட்டுவம்பட்டி, ஆனால் அவர் பெற்றுக்கொள்ளவில்லை. 4ம் பிரதிவாதிக்கு எந்த முகவரியில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அட்டுவம்பட்டி, அவர் பெற்றுக்கொண்டார், ஆனால் பதில்

கொடுக்கவில்லை. எதற்காக மீத கிரைய தொகையை செலுத்த 2 ஆண்டு காலம் போடப்பட்டது என்றால் அப்போது என்னிடம் பணம் இல்லாததால் காலக்கெடு போடப்பட்டது. வா.சா.ஆ.21 நீதிமன்றத்தின் மூலம் வாங்கிய கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

4. மேற்படி கிரைய ஆவணத்தில் பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் சர்வே எண்.1354/2A, 1354/2B என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 1354/2Bல் 1ஏக்கர் மற்றும் 1354/2Aல் 48 செண்ட்டும் உள்ளது என்றால் சரியல்ல, மொத்தம் 3 ஏ 9 செண்ட். கிரைய ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டா எண்.8441 பாபு என்ற பெயரிலும் பட்டா எண். 8718 பிரதீப் என்பவர் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல. ஆதியில் ஜோசப் பெயரில் சர்வே எண்.1354க்கு தவறுதலாக பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1987ல் மனு கொடுக்கப்பட்டு மேற்படி சர்வே எண்ணானது 3 உட்பிரிவாக பிரிக்கப்பட்டது என்றும், அதில் ஜோசப் என்பவரும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

( வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.